
திருவாசகம் - 29
அருள்பத்து கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# அருள்பத்து கதை வடிவில்
# மகா மாயா சுத்தி
# திருப்பெருந்துறையில் அருளியது

மகாமாயை அல்லது பிரபஞ்சமயமாக இருக்கும் உமாதேவியார் எப்பொழுதும் பரிசுத்தமாகவே இருக்கிறாள். மெய்யுணர்வை அடைந்தவர்களுக்கு இவ் உண்மையை அறியும் அருள் உண்டு. அதை அறிந்த மெய்யடியான் அம்மையின் பேரருளுக்குட்பட்டவனாவான்.

**சோதியே சுடரே சூழொளி விளக்கே**

**சுரிசூழற் பணைமுலை மடந்தை**

**பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய்**

**பங்கயத் தயனுமா லறியா**

**நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்**

**நிறைமலர்க் குருந்தமே வியசீர்**

**ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என் றரு ளாயே 01**

"சோதியாகவும், சுடராகவும், விளக்காகவும் ஒளிவிடும் சிவனே, அம்மையின் ஒரு பகுதியானவனே, பால்போன்ற வெண்ணீற்றை அணிந்தவனே, அயனும் மாலும் அறிய முடியாத ஒளிப்பிழம்பே விருப்புடன் உன்னை அழைக்கிறேன், எதற்காக என்னை அழைக்கிறாய்" என்று சொல் என்கின்றார் மாணிக்கவாசகர், இவ்வாறு சொல்கிறார். பரமேஸ்வரா, அம்பிகையின் மணாளனான நீ ஆதிமூலமானவன். உனது திருவிளையாடல்களைப் புரிந்து கொள்ளவே முடியாது. ஒவ்வொருவரும் தமது மனதிற்கு எட்டியவரை அதை நினைத்து மகிழலாம். சிவன் அடியார்க்கும் அடியவன். அதனால் அவன் அடியார்களின் சிந்தையில் எப்போதும் இருப்பான். உனது மகள் பெரும் சிவபக்தை. எதற்காக அவள் சுந்தரேசன்மீது காதல் கொண்டாள் என்பது சிவனுக்குத்தான் தெரியும். அவன் பெரும் அழகன் அல்ல. அறிவாளியும் அல்ல.

நல்லவனும் அல்ல. அலுவலகத்தில் இலஞ்சம் வாங்கியதாக ஒருவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். அந்த வழக்கைக் கைவிட்டால் இலட்சரூபா தருவதாகச் சொல்லியும் வழக்கைப் போட்டவர் அதை மீளப்பெற மறுக்கிறார். இந்த நிலையில் உனது மகள் அவனைத் தீவிரமாகக் காதலித்தது ஏனென்று இப்போதும் நான் நினைப்பதுண்டு. அதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகளும் நினைக்கிறார். ஒருவரை இன்னொருவர் அழைத்தால் காரணத்தைக்கூறி அழைப்பதுதான் முறை. மாணிக்கவாசகரைச் சிவன் அழைத்துள்ளார். ஏன் அழைத்தார் என்று புரியாமல் அவர் தவிக்கிறார். இதெல்லாம் அவனுக்கு ஒரு விளையாட்டு” என்றார் கதிரேசன்.

**நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்**

**கண்ணனே விண்ணுளோர் பிரானே**

**ஒருத்தனே உன்னை ஓலமிட்டலறி**

**உலகெலாந் தேடியுந் காணேன்**

**திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்**

**செழுமலர்க் குருந்தமே வியசீர்**

**அருத்தமே அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என்றரு ளாயே 02**

“தில்லைக் கூத்தனே, நிர்மலனே, நீறு அணிந்த நெற்றியில் கண்ணை உடையவனே, மனதில் உள்நின்று இயக்குபவனே, அனைத்துமானவனே, உன்னை நான் ஓலமிட்டபடி தேடி அலைகிறேன் எனது ஊனக் கண்களால் உன்னைக் காணமுடியவில்லை. ஞானக்கண்ணுக்கு அகப்படுபவனே. திருப்பெருந்துறையில் வசிப்பவனே, வலிந்து அழைக்கும் எனக்குக் காட்சி தா” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைக் கேட்கிறார். “சிவன் மெய்யடியார்களின் உள்ளத்தில் மறைந்திருப்பான். அவர்களது ஞானக்கண்ணுக்கு அவன் புலப்படுவான். ஊனக்கண்ணுடன் அலைந்து திரியும் மனிதர்களுக்கு அவன் தென்பட மாட்டான். நல்லைநாதன் தனது மனத்தில் இருக்கும் சிவன் அடிக்கடி தனக்குப் புலனாவதாகச் சொல்வான். இதைப் பலரும் நம்புவதில்லை. ஒவ்வொரு முறையும் சிவனை அவன் சந்திக்கும்போது ஒவ்வொரு கதை சொல்வான். சுந்தரேசன் உனது மகளைத் திருமணம் செய்து தரும்படி என்னை வந்து கேட்டது அவனுக்குத் தெரியாது. அவன் வந்து சந்தித்த மறுநாள் நல்லைநாதன் என்னிடம் வந்து, “அண்ணை, நீங்கள் ஒரு செயலைச்

செய்யத் தீர்மானித்துள்ளீர்கள். அது தீமையைத் தான் தரும். அதனால் அதைக் கைவிடுங்கள்” என்றவன். நான் சிவனை வணங்கும்போது அதைக் கேட்டேன். சிவனைக் கேட்டால் கனவு வரும். ஆனால் அன்று வரவில்லை. சுந்தரேஸ்வரனும் பெற்றோரும் வந்து வற்புறுத்தியதாகல் சிவனிடம் அந்தப் பாரத்தை ஒப்படைத்துவிட்டுச் சென்றேன். அது தான் விதியென்றால் சிவன் என்ன செய்வார்” என்றார் கதிரேசன்.

**எங்கள்நாயகனே என்னுயிர்த் தலைவா**

**ஏலவார் புழலிமார் இருவர்**

**தங்கள் நாயகனே தக்கநற்காமன்**

**தனதுடல் தழலெழ விழித்த**

**செங்கண்நாயகனே திருப்பெருந்துறையில்**

**செழுமலர்க் குருந்தமே வியசீர்**

**அங்கணா அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என்றருளாயே 03**

“மெய்யடியார்களின் நாயகன் அவன். என் உயிரின் தலைவனும் அவன்தான். நீண்ட கூந்தலையுடைய இருவரின் நாயகனே. காமனை எரித்த முக்கண்ணனே. திருப்பெருந்துறையில் அமர்ந்து அடியார்க்கு அருளுபவனே, அடியேன் அன்புடன் அழைத்தால் அருள் செய்யமாட்டாயா…?” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைக் கேட்கிறார்.

“ஒரு மெய்யடியான் காமத்தை அழித்த பின்பு மகாமாயையின் புனிதத் தன்மையைப் புரிந்து கொள்வான். உமாதேவியாரும் கங்காதேவியாரும் சிவசொரூபம் என்பது அப்போது புரிய வரும். மாயையின் தாக்கத்தால் மும்மலத்தில் அகப்பட்டு உழல்பவர்கள் சிவனுக்கு இரு மனைவிமார் இருப்பதாக நம்பி வாழ்வர். அவனது அருளை நாடித் தூயமனதைப் பெற்றவர்களுக்கு உமாதேவியாரும் கங்காதேவியாரும் சிவனது சொரூபம் என்பது விளங்கும். உனது மகள் பெரும் சிவபக்தை. நீயும் உனது மனைவியும் பெரும் சிவபக்தர்கள். அதை ஊரவர்கள் எவ்வாறு கணித்துள்ளனர் என்று உனக்குத் தெரியும். சிவன் அவனைத் திருமணம் செய்ய எப்படி அனுமதித்தான். கனவிலாவது காட்டியிருக்கலாமே. கோவில் பக்கம் செல்லாத பலரது பிள்ளைகள் மகிழ்வாக வாழ்கின்றனர் என்று கூறிக் கேலி செய்கின்றனர். அது ஊனக்

கண்ணுள்ளவர்களின் செயற்பாடு. ஞானக்கண் உள்ளவர்கள் அதன் உள் அர்த்தத்தைப் புரிந்து கொள்வார்கள். சுவாமியார் உனக்கு என்ன சொன்னவர், ‘‘மகனே எல்லாம் என்றோ தீர்மானிக்கப்பட்டவை. அவை உரிய நேரத்தில் வெளிப்படும். ஆன்மாக்கள் செய்த பாவபுண்ணியங்களுக்கேற்ப வாழ்க்கை அமைகிறது. அதை அமைப்பவன் சிவன். அதை மாற்ற வேண்டுமானால் சிவன்தான் மாற்ற வேண்டும். கவலைப்படாதே. எல்லாம் சிவன் செயல் என்று நினை’’ என்றவர். அதன்பின்பு தான் எனது மனம் அமைதியடைந்தது’’ என்றார் கதிரேசன்.

**கமலநான்முகனுங் கார்முகில் நிறத்துக்**

**கண்ணனும் நண்ணுதற்கரிய**

**விமலனே எமக்கு வெளிப்படா யென்ன**

**வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்**

**திமிலநான் மறைசேர் திருப்பெருந்துறையில்**

**செழுமலர்க் குருந்தமே வியசீர்**

**அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என்றருளாயே 04**

‘‘பரமேஸ்வரா, யார் பற்றின்றி அன்பைச் செலுத்திச் சிவனை அழைக்கிறார்களோ அவர்களுக்கு அருளுவது மட்டுமல்லாமல் காட்சியும் சிவன் கொடுப்பான். அரியும் அயனும் சிவனைக் காட்சி தரும்படி வேண்ட, சிவன் அவர்களுக்குக் காட்சி கொடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. சிவன் காட்சி கொடுத்தால் அகந்தை, ஆணவம் யாவும் அகல வேண்டும். ஆனால் அவர்களுக்கு அது அதிகரித்தது. அதனால்தான் அவர்களால் அடியையும் முடியையும் காணமுடியவில்லை. அன்பு தான் அவனைப் பிடிக்கும் தூண்டில். பற்றற்ற அன்பில் அவன் சிக்கிவிடுவான். அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள், ‘‘சிவனே, நான் உன்னைக் காண விரும்புகிறேன்’’ என்கிறார். அவரைச் சிவன் பல வடிவங்களில் சந்தித்துள்ளான். குருவாக, பிராமணனாக, கூலியாக இவ்வாறு சந்தித்த சிவனை, அவனது சொந்த உருவில் காண ஆசைப்படுகிறார் மாணிக்கவாசக சுவாமிகள். அது இயல்பான ஆசை தானே. சிவன் பல்லாயிரக்கணக்கான பெயர்களில் அழைக்கப்படுகிறான். எல்லாப் பெயர்களுக்கும் பொருள் ஒன்று. அதுபோல அருளும் ஒன்று. அவன் மாசற்ற சோதி. அம்மையும் மாசற்ற சோதியானவள். கங்காதேவியும் மாசற்ற சோதிதான். அவனை

அன்பால் அணுகுவோரின் மாசுகளான மலங்கள் நீங்கும். இதை உணர்பவர்கள் தான் மெய்யடியார்கள்'' என்றார் கதிரேசன்.

**துடிகொள்நே ரிடையாள் கரிகுழல் மடந்தை**

**துணைமுலைக் கண்கள்தோய் சுவடு**

**பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு**

**பொங்கொளி தங்குமார் பின்னே**

**செடிகொள்வான் பொழிகைசூழ் திருப்பெருந்துறையில்**

**செழுமலர்க் குருந்தமே வியசீர்**

**அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என்றருளாயே 05**

"பரமேஸ்வரா, பெண்களை மதிப்பதில்லை. அவர்களை அடிமையாகத்தான் சைவசமயத்தினர் நடத்தி வருகின்றனர் என்று இப்போதும் பலர் சொல்கின்றனர். மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் பெண்கள் போற்றப்பட்டுள்ளனர். அவர் சொல்கிறார்; "சக்தி சமேதா, நீ படைத்தருளிய பொலிவும் பெருமைகளும் உனக்குச் சக்தியால் வந்தவை என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதனால்தான் உன்னை உயிர்களின் தாய் என்கின்றனர். தாய்மைப் பண்புள்ளவள்தானே இந்த எளிய மகனின் சொல்லுக்குச் செவிசாய்த்து எனக்கு உன்னைக் காட்டியருள்வாயாக'' என்கிறார். அதை இப்போதும் நிறுவலாம். நல்லைநாதனின் மனைவி ஒழுக்கமுள்ள உத்தமி. அவன் அன்றன்று உழைத்துக் கஷ்டப்பட்ட வேளையிலும் நான் அவளை அறிவேன். அவள் மனம் நோகாது நல்லைநாதனைப் பாதுகாத்தவள். அவளது மேலான அன்புதான் அவனது முயற்சிக்கும், உயர்ச்சிக்கும் காரணம். விட்டுக்கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக் கொடுத்தும், கட்டுப்பாடாக இருக்க வேண்டிய இடத்தில் கட்டுப்பாடாகவும், துன்பமான வேளைகளில் இன்பத்தை உண்டுபண்ணுபவளாகவும் இருக்கும் பெண் ஆணின் சிறந்த துணையாவாள். அப்படி நடந்தமையால்தான் அவளது பிள்ளைகள் கல்வியில் மேம்பட்டவர்களாகவும், சமூகத்திற்கு உதவுபவர்களாகவும் இருக்கின்றனர். சுந்தரேசனின் தாயால்தான் அக்குடும்பம் சீரழிந்து குட்டிச் சுவரானது. அவள் யாரையும் மதிப்பதில்லை. கடைசிகாலத்தில் சுந்தரேசனின் தகப்பனின் தாயும் தந்தையும் ஆச்சிரமத்தில் வாழ்ந்தவர்கள். இப்போது சுந்தரேசனின் தந்தைக்கு மதிப்பே இல்லை. தாயும் மகனும் சேர்ந்து அவரை ஆட்டிப் படைகின்றனர்'' என்றான் கதிரேசன்.

**துப்பனே தூயாய் தூயவெண்ணீறு**

**துதைந்தெழு துளங்கொளி வயிரத்**

**தொப்பனே உன்னை உள்குவார் மனத்தின்**

**உறுசுவை துளிக்கும் ஆரமுதே**

**செப்பமா மறைசேர் திருப்பெருந்துறையில்**

**செழுமலர்க் குருந்தமே வியசீர்**

**அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என்றருளாயே 06**

“சிவன் அறிவு சொரூபி என்றும், பிரகாசமானவன் என்றும் நினைத்து தியானிப்பவர்களுக்கு அருள் புரிகின்றாய். அதனால் உன்னை அன்புடன் வேண்டி அழைக்கும் எனக்கும் அருள்புரிவாயாக” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை இரக்கிறார். மாணிக்கவாசகர் சொல்வது உண்மை. அவர் ஞானி. முக்காலமும் உணர்ந்தவர். அதனால் அவரது வாய்ச்சொல் பொய்யாகாது. என்னைப் பொறுத்தவரை சிவனை வணங்குவோர் மகிழ்வுடன் தான் வாழ்கின்றனர். மகாலிங்கம் குடித்துவிட்டுச் செய்யக்கூடாத செயல்களையெல்லாம் செய்தவன். இப்போ மனம் திருந்திச் சிவனடியாராகிவிட்டான். அவன் இப்போ பெரும் சிவபக்தன். யாரும் தேடுவாரற்றுக் குடித்துவிட்டுத் தெருவோரங்களில் படுத்திருந்த அவனை இப்போ பிள்ளைகள் மிக்க அன்புடன் பராமரிக்கின்றனர். ஊரவர் மதிக்கின்றனர். சிவனடியார்கள் வணங்குகின்றனர். இதற்கு மேல் என்ன வேண்டும்” என்றார் கதிரேசன்.

**மெய்யனே விகிர்தா மேருவே வில்லா**

**மேலவர் புரங்கள் மூன்றெரித்த**

**கையனே காலாற் காலனைக் காய்ந்த**

**கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்**

**செய்யனே செல்வத் திருப்பெருந்துறையில்**

**செழுமலர்க் குருந்தமே வியசீர்**

**ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என்றருளாயே 07**

“நேற்று என்னைச் சந்திக்கவென்று ஒரு சிவனடியார் கூட்டம் வந்தது. அவர்களுடன் மகாலிங்கமும் வந்தவன். அவன் சொன்னான்; “அண்ணை, சிவன் வெவ்வேறு வடிவங்களை எடுக்கும் வல்லமை உள்ளவன். முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவன், காலத்தை வென்றவன். சுயஞ்சோதியானவன். இவ்வாறு சிவனை உணர்ந்து கொள்பவர்களுக்கு அவன் அருள் புரிகிறான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். அத்துடன் நான் கூப்பிடுவதை ஏற்று எனக்கருள்” என்கிறார். அது உண்மை. அவர் சொன்னபடிதான் நான் செய்கிறேன். இப்போ எனக்கு எந்தக் குறைகளும் இல்லை. எனது பிள்ளைகள் என்மீது மிக்க அன்பு செலுத்துகிறார்கள். அவர்களது மனைவிமாருக்கு என்னை முன்பு பிடிக்காது. இப்போ நான் காலம் தாழ்த்திச் சென்றாலும், எனக்காகக் காத்திருந்து எனக்கு உணவு பரிமாறுகிறார்கள். முன்பு எனது பேரப்பிள்ளைகள் எனக்கு அருகில் வரமாட்டார்கள். கள்ளையும், சாராயத்தையும் கலந்து குடிப்பதால் எனது உடல் துர்நாற்றம் வீசும். இப்போ அப்படியல்ல சந்தனத்தின் நறுமணமே எனது உடலில் இருந்து வீசுவதால் பேரப்பிள்ளைகள் என்மீது துள்ளி விளையாடும். அதனால் எவ்வளவு இன்பம் தெரியுமா…? இது போதும் அண்ணை” என்று கண்ணீர் விட்டவன். காலம் எல்லாவற்றையும் மாற்றும் சக்தி படைத்தது. அதனால் உனது துயரங்களையும், காலத்தின் காலனான சிவனிடம் ஒப்படை” என்றார் கதிரேசன்.

**முத்தனே முதல்வா முக்கணா முனிவா**

**மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்**

**பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்**

**பரகதி கொடுத்தருள் செய்யுஞ்**

**சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்**

**செழுமலர்க் குருந்தமே வியசீர்**

**அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என்றருளாயே** **08**

“பரமேஸ்வரா, ஒருவனது துன்பங்களும், துயரங்களும் தீரவேண்டுமானால் சிவனைப் பிரார்த்தித்தல் வேண்டும். அவனால்தான் ஆக்கவும், அழிக்கவும், அருளவும் முடியும். நான் சொல்லிச் சிவனைப்பற்றி அறிந்த மகாலிங்கம் இப்போ எனக்குச் சிவனைப்பற்றிச் சொல்லுகிறான். அதுதான் காலமாற்றம். நல்லதொரு திருப்பம். நேற்றுச் சிவனடியார்களுடன் வந்த மகாலிங்கம் அச் சிவனடியார்களுக்கும் எனது வீட்டில்

இருந்தோருக்கும் சொன்னான்; “மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைத் தெய்வமாக மதித்துத் தனக்கு அருளுமாறு வேண்டினார். நான் மாணிக்கவாசக சுவாமியைத் தெய்வமாகவும் குருவாகவும் மதிக்கிறேன். அவரைப் பற்றி அறிந்த பின்பு தான் எனக்குச் சிவநினைவுண்டானது. அவரது சொற்கள் தான் சிவனது பெருமைகளை உறுதி செய்தது. அவர் சொல்கிறார்; “சிவனே உன்னை நித்திய முத்தன் என்றும், முக்கண்ணன் என்றும், நித்திய சித்தன் என்றும், தியானித்தால் தியானிக்கும் சீவன் பரிசுத்தனாகிப் புனிதனாகிறான்” என்று அதைத்தான் நான் தினமும் எண்ணுவேன். அதனால் எனது மனம் தூய்மை அடைந்து விட்டது. நேற்று எனது மூத்த பேரன் மேற்படிப்புக்காக வெளிநாட்டுக்குச் செல்கிறான். இங்குள்ள பல்கலைக்கழகத்தில் படித்துத் திறமையாகச் சித்தியடைந்தமையால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்று அவனை அழைக்கிறது. அவன் எனது பாதங்களைப் பணிந்து; “ஆசீர்வதியுங்கள் தாத்தா” என்ற போது எனது உடல் சிலிர்த்தது. சிவனது நாமத்திற்கு இவ்வளவு சக்தியா என்று வியந்தேன்” என்றான். துக்கம், துயரம், கவலைகள் யாவையும் போக்கும் மருந்து சிவநாமம். அதனால் அவனது நாமங்களைப் போற்று நிம்மதியடைவாய். அத்துடன் உனது மகளின் ஆன்மாவும் சாந்தியடையும்” என்றார் கதிரேசன்.

**மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி**

**மறுமையோ டிம்மையுங் கெடுத்த**

**பொருளனே புனிதா பொங்குவா ளரவங்**

**கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்**

**தெருளுநான் மறைசேர் திருப்பெருந்துறையில்**

**செழுமலர்க் குருந்தமே வியசீர்**

**அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்**

**அதெந்துவே என்றருளாயே 09**

“பரமேஸ்வரா, இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் பற்றுக் கொள்ளாத தெளிந்த அறிவை இறைவன் எனக்குக் கொடுத்தருளியுள்ளான். அவன் ஒருவன் தான் மெய்ப்பொருள். அவனோடு ஒப்பிடக் கூடிய ஒரு பொருள் உலகில் இல்லை. அதனால் அவன் என்றும் புனிதன். அருளுக்கு அவன் உறைவிடம். அதனால் எனது அழைப்பை அவன் ஏற்பான்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இதை அவர் சிவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்பே சொல்கிறார். அதன் அர்த்தம் என்னவென்றால் என்னை

ஆட்கொண்டது போல அவன் மீது மெய்யன்பு வைக்கும் அனைவரையும் ஆட்கொள்வான் என்பதைக் கூறுவதற்காகவே. அவனை அறிகிறவன் அறிஞனாகிறான். அதனால் அவனுக்கு உலகையும் உலகில் உள்ள பொருட்களையும் தெரியும். இரண்டும் நிலையில்லாதன என்று புரிந்து கொண்டவன் அவனோடு ஐக்கியப்பட்டு விடுவான்" மகாலிங்கம் சொன்னான்; "அண்ணை சிவனை எந்நேரமும் நான் நினைத்திருப்பதால் அவன் என்னைப் புனிதனாக்கித் தெளிந்த அறிவைக் கொடுத்துள்ளான். "இப்போ தாத்தா சிவனை வணங்குவதால் புனிதராகி விட்டார். அவரிடம் ஆசி பெறுவது சிவனிடம் ஆசி பெறுவதைப் போன்றது" என்று பேரன் சொன்னவன். அதனால் அவனுடன் பல்கலைக்கழகத்தில் கற்ற அயலூர் மாணவன் ஒருவன் தனக்கு வேலை கிடைத்ததும் அதை எனக்குச் சொல்லி விட்டு எனது பாதங்களைத் தொட்டு வணங்கினான். அதன் பின் சிவனைத் தவிர வேறு எதையும் என்னால் நினைக்க முடியவில்லை. இது என்னைத் தூய்மைப்படுத்தச் சிவன் செய்யும் திருவிளையாடல்" என்றவன். அதனால் தீராத துயரங்கள் எவையும் இல்லை. துயரங்கள் நீங்க வேண்டுமானால் அருளின் உறைவிடமான அவனைச் சரணடைய வேண்டும்" என்றார் கதிரேசன்.

**திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்**
**செழுமலர்க் குருந்தமே வியசீர்**
**இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்**
**டென்னுடை யெம்பிரான் என்றென்**
**றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்**
**அலைகடல் அதனுளே நின்று**
**பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்**
**போதராய் என்றரு ளாயே 10**

மகாலிங்கம் பூரிப்புடன் கதிரேசனது வீட்டுக்கு வந்தான். அவர் சிவபூசையைச் செய்து முடிக்காது வீட்டை விட்டுச் செல்லமாட்டாரென்பது அவனுக்குத் தெரியும். அவன் ஐந்து வேட்டிகளும் சில உணவுப் பண்டங்களும் கொண்டு வந்திருந்தான். கதிரேசன் வெளியே வந்ததும் அவரின் அருகே சென்று அவரது பாதங்களைக் கையால் பற்றி வணங்கி விட்டு அவரது வலது காலைத் தூக்கி தனது தலையில் மேல் வைத்து விட்டு சொன்னான்; "இரண்டு வருடங்களுக்கு முன் ஆவணிப்

பிரதோச நாளன்று தான் என்னைச் சிவனோடு சேர்த்து வைத்தீர்கள். மாணிக்கவாசக சுவாமிகள், "அன்று நீ அரிய சூழ்நிலையில் வீற்றிருந்து என்னை ஆட்கொண்டாய் அந்த நல்ல நாளை எண்ணி இப்பொழுதும் நான் மகிழ்கிறேன். அதுபோல மீண்டும் அந்த நிலை கிட்டுமா என்று வருந்துகிறேன். அன்று போல இன்று நீ என்னை உன்மயமாக்கி அருள்" என்கிறார். ஒவ்வொருவருக்கும் அவர்களது வாழ்வில் மறக்க முடியாத சில தினங்கள் வரும். சிலர் தாம் பிறந்த நாளை விமர்சையாகக் கொண்டாடுவர். அதைக் கொண்டாடுவது நல்லதல்ல. பிறந்ததே துன்பம். அத்துன்பத்தைக் கொண்டாடாது அன்று முழுக்க நான் சிவனைத் துதிப்பேன். சிலர் தமது திருமணநாளைக் கொண்டாடுவர். நான் மாணிக்கவாசகரைப் போல சிவனை வணங்கத் தொடங்கிய நாளை மகிழ்வுடன் கொண்டாடுகிறேன். இங்கு வந்தவர்களுக்கு வேட்டியைக் கொடுக்க விரும்புகிறேன். இன்று மடத்தில் சாப்பாடும் கொடுக்கிறேன். வந்து விடுங்கள். நான் சிவனை வணங்கத் தொடங்கிய பின்பு பெற்ற இன்பம் கணக்கிலடங்காதது. அதனால்தான் கொண்டாடுகிறேன்" என்றான்.

"நல்லது. உனக்கு சிவனருள் நிரம்பக் கிடைத்துள்ளது. அது மேன்மையடையட்டும்" என்றார் கதிரேசன்.

திருச்சிற்றம்பலம்.